# INDIAN SCHOOL SALALAH

## ACADEMIC YEAR 2026 – 2027

| | | | |
|---|---|---|---|
| Roll No: | | Assessment Type: **FIRST TERM EXAMINATION SEPTEMBER - 2026** | |
| Grade: **VI** | | Marks Obtained: | **80** |
| Subject: **TAMIL** (Second language)<br>Subject code: (006) | | | |
| Date of Assessment: **27.09.2026** | | Time: **3 Hours** | |

***General Instructions:***

- This question paper contains **14** questions in **8** pages.
- Marks are indicated against each question.

| S.No | Questions | Marks |
|---|---|---|
| | **பகுதி (அ) (படித்தல்) - READING** | |
| 1. | **பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**<br>காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதை காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார்.யாரை பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்கு தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்...."என்று சிறுமி கூறி முடிப்பதற்குள்," அம்மா அனுப்பி விட்டாரா? என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை | 5X1=5 |

| | | |
|---|---|---|
| | அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்ட காமராசர் மனம் நெகிழ்ந்தார்.<br>**வினாக்கள்:**<br>I. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள். ____________<br>அ) பெற்றோர் ஆ) சிறுவன் சிறுமி இ) மக்கள் ஈ) ஆசிரியர்<br>**II.** இந்நிகழ்வுக்கு சிறுவனது குடும்பத்தின் _______ ப்பண்பை விளக்குகிறது.<br>அ) ஏழ்மை ஆ) நேர்மை இ) உழைப்பு ஈ) கல்லாமை<br>III. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம். ________<br>அ) நெகிழ்ந்தார் ஆ) உடைந்தார் இ) அழுதார் ஈ) இறந்தார்<br>IV. சிறுவனும் சிறுமியும் எதற்காக காமராசர் வீட்டிற்கு வந்தனர்.<br>அ) தேர்வுக்கு பணம் கட்ட ஆ) வீட்டு வாடகை<br>இ) மருத்துவச் செலவு ஈ) பள்ளி கட்டணம்<br>V. காமராசர் செய்த உதவி யாது?<br>அ) புத்தகம் கொடுத்தல் ஆ) பணம் கொடுத்தல்<br>இ) உணவு கொடுத்தல் ஈ) விளையாட்டுப் பொருள் | |
| 2. | **பகுதி (ஆ) (இலக்கணம்) – GRAMMAR**<br>**சான்று தருக**.<br>**I.** மொழிக்கு முதலில் வராத எழுத்துகள். ____________<br>அ) மெய்யெழுத்து ஆ) உயிரெழுத்து<br>இ) உயிர்மெய் ஈ) கடை எழுத்து<br>**II.** உயிர் மெய் எழுத்துகள் மொத்தம் எத்தனை? ____________<br>அ) **218** ஆ) **247** இ) **216** ஈ) **12**<br>**III.** குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு ________________ | **5x1=5** |

| | | |
|---|---|---|
| | அ) 1 - மாத்திரை ஆ) 2- மாத்திரை<br>இ) அரை மாத்திரை ஈ) கால்மாத்திரை<br>IV. வல்லினம் என்பது ________________<br>அ) ய், ர், ல், வ், ழ், ள் ஆ) க், ச், ட், த், ப், ற்<br>இ). ங், ஞ், ண், ந், ம், ன் ஈ) அ, ஆ, இ, ஈ,<br>V. எழுத்துகள் ______________ வகைப்படும்.<br>அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு | |
| **3.** | **நிரப்புக**.<br>I. இரண்டு மாத்திரை அளவு உள்ள ஓரெழுத்து சொல்.<br>அ) பூ ஆ) மலர் இ) அது ஈ) பல்<br>II. மூன்று புள்ளிகளை உடைய தனி வடிவம் பெற்றது.<br>அ) ஆய்தம் ஆ) உயிர் இ) மெய் ஈ) உயிர்மெய<br>III. உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் _____ வரும் .<br>அ) இடையில் ஆ) நடுவில் இ) முதலில் ஈ) கடைசியில்<br>IV. ஒலி வடிவமாக எழுதப்படுவது வரி வடிவமாக எழுதப்படுவது _____ எனப்படுகிறது.<br>அ) சொல் ஆ) எழுத்து இ) பொருள் ஈ) யாப்பு | **4X1=4** |
| 4. | **பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**<br>I. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?<br>II. மொழிக்கு முதலில் வரா எழுத்துகள் யாவை?<br>III. மெய்யெழுத்து மொத்தம் எத்தனை? அவை யாவை? | **3X2=6** |
| 5. | **பகுதி (இ) (இலக்கியம்) - LITERATURE**<br>**பின்வரும் பாடலை படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.** | **5X1=5** |

| | | |
|---|---|---|
| | ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே - நீ<br>ஏன் படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே<br>நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே - நம்<br>நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்துவிடாதே<br>மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக்கூடாது - பண்பு<br>முறைகளில் மொழிதனிலும் மாறக்கூடாது<br>மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக்கூடாது - தன்<br>மானமில்லாக் கோழையுடன் சேரக்கூடாது<br>**வினாக்கள்**<br>I. நாம் __________ சொல்படி நடக்க வேண்டும்<br>அ) இளையோர் ஆ) ஊரார் இ) முத்தோர் ஈ) வழிப்போக்கர்<br>II. மாணவர் பிறர் __________ நடக்கக் கூடாது.<br>அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி<br>III. பிறர் _______________ நம்பி வாழ கூடாது.<br>அ) பணத்தை ஆ) உழைப்பை இ) தொழிலை ஈ) குணத்தை<br>IV. இப்பாடலின் ஆசிரியர். _______________<br>அ) கல்யாணசுந்தரம் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) ஔவையார்<br>V. தன்மானம் இல்லாத _____________ களுடன் சேரக்கூடாது.<br>அ) கோழை ஆ) சோம்பேறி இ) அறிவில்லார்.<br>ஈ) அறிவுடையான் | |
| 6. | **கோடிட்ட இடங்களை தகுந்த திருக்குறள் சீர்களால் நிரப்புக.**<br>I. இனிய ________________ இன்னாத கூறல்<br>கனியிருப்பக் ______________ கவர்ந் தற்று .<br>II. அன்பிலார் ______________ தமக்குரியர் அன்புடையார் | **4X1=4** |

| | | |
|---|---|---|
| | ___________ உரியர் பிறர்க்கு. | |
| 7. | **சரியான விடையைத் தேர்தெடுத்து எழுதுக.**<br>I. '**செம்பயிர்**' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.<br>அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்<br>இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்<br>II. நாள் முழுவதும் வேலை செய்து களைதவர்க்கு _____ ஆக இருக்கும்.<br>அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி<br>III. "**மா**" என்னும் சொல்லின் பொருள். _______________<br>அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா<br>IV. **வழி + எல்லாம்** என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.<br>அ) வழிஎல்லாம் ஆ) வழிலெல்லாம்<br>இ) வழி ல்லாம் ஈ) வழியெல்லாம்<br>V. **தட்பவெப்பம்** என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.<br>அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம்<br>இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்.<br>VI. கல்வியானது நமது ___________ துணையாய் அமைகிறது.<br>அ) ஆவிக்குத் ஆ) கண்ணுக்குத் இ) உடலுக்குத் ஈ) செவிக்குத்<br>VII. "**கைப்பொருள்**"என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.<br>அ) கையில்+ பொருள் ஆ) கைப் + பொருள்<br>இ) கை + பொருள் ஈ) கைப்பு + பொருள்<br>VIII. **காடு + ஆறு** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.<br>அ) காட்டாறு ஆ) காடாறு இ) காட்டுஆறு ஈ) காடு ஆறு | **8x1=8** |
| 8. | **பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.**<br>I. மரங்களை வளர்த்து ______ யைக் காப்போம். (**செயற்கை / இயற்கை** ) | **3X1=3** |

| | | |
|---|---|---|
| | II. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் __________ என்று பெயர். **(பறவை / பரவை)**<br>III. முத்து தம் _________ காரணமாக ஊருக்கு சென்றார். **(பனி / பணி)** | |
| 9. | **எவையேனும் குறுவினாக்களுக்கு ஐந்துக்கு மட்டும் விடையளி.**<br>I. தமிழ் ஏன் மூத்த மொழி என்று அழைக்கப்படுகிறது?<br>II. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?<br>III. முன்பெல்லாம் மழைக்காலம் எவ்வாறு இருக்கும்?<br>IV. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?<br>V. உயிருள்ள உடல் எது?<br>VI. நாம் யாருடன் சேரக்கூடாது?<br>VII. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை? | **5X2=10** |
| 10. | **எவையேனும் சிறுவினாக்களுக்கு இரண்டுக்கு மட்டும் விடையளி**<br>I. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?<br>II. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணங்கள் தருக.<br>III. குருவிகள் ஏதிலிகளாக ஆனதற்குக் காரணம் என்ன?<br>IV. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.<br>V. கல்வியை போற்றி கற்க வேண்டும்? | **3X2=6** |
| 11. | **பகுதி- (ஈ) (விரிவானம்) - DETAIL**<br>எவையேனும் **விரிவானம் ஒன்றுக்கு** மட்டும் விடையளி.<br>**I. ஒளி பிறந்தது**<br>முன்னுரை- அப்துல் கலாமின் சிறுவயது ஆர்வம் - மாணவர்களுக்கான ஆலோசனைகள் - முடிவுரை<br>**(அல்லது)**<br>**II. கிழவனும் கடலும்** | **1x7=7** |

| | | |
|---|---|---|
| | முன்னுரை - கதையின் மாந்தர்கள் - சாண்டியாகோவின் சோகம் - சாண்டியாகோ போராட்டம் - தூண்டிலில் சிக்கிய பெரிய மீன் - வெற்றியும் ஏமாற்றமும் - மனோலின் வருகை - முடிவுரை | |
| 12. | **பகுதி - (உ) (படைப்பாற்றல்) CREATIVITY**<br>**படத்தைப் பார்த்து பத்து வரிகளுக்கு மிகாமல் கதை எழுதவும்.**<br> | **1x6=6** |
| 13. | **ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக.**<br>I. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையாளருக்குக் கடிதம் எழுதுக.<br>(**அனுப்புநர், பெறுநர், பொருள், உறை மேல் முகவரி**)<br>**முகவரி - முகிலன்/தேன்மொழி, பாரதிநகர், ஈரோடு**]<br>**(அல்லது)** | **1x7=7** |

| | | |
|---|---|---|
| | II. உடல்நிலை சரியில்லாத காரணத்தால் விடுப்பு விண்ணப்பம் எழுதுதல்.<br>(**அனுப்புநர், பெறுநர், பொருள், உறை மேல் முகவரி**)<br>**முகவரி -**<br>**தேன்மொழி, ஆறாம் வகுப்பு- 'ஈ' பிரிவு, இந்தியன் பள்ளி சலாலா, சலாலா** | |
| 14. | **கலைச்சொல் தருக.**<br><br>**I. Education - II. E- Library - III. Weather -**<br>**IV. App -** | **4x1=4** |